ஆயுள் காப்புறுதி 3.6 பில்லியன் ரூபாவுக்கான எழுத்து மூலமான பணிக்கொடை இலாபம் அதாவது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 27% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன், துணைக் காப்புறுதித் தொழிற் துறையானது முதன்மையாக முன்னெடுக்கப்பட்டதுடன், அது ஆயுள் காப்புறுதியின் மொத்த சராசரி பதியப்பட்ட பணிப்கொடையில் 86% பங்களிப்பினை வழங்கியுள்ளது. இந்த் வளர்ச்சி வேகம் ஆச்சரியமானது என்பதுடன், கடந்த வருடத்திலான 19% வளர்ச்சி வேகத்துடன் பார்க்கும்போது எமக்கு அண்மித்தவர்களினால் பெற்றுக்கொண்ட வளர்ச்சி வேகத்தைவிட அது ஒப்பீட்டளவில் 11% வளர்ச்சிவேகமாகும். ஆகக் குறைந்த பணிக்கொடையை அறிமுகப்படுத்தல் மற்றும் மிகவும் இலாபகரமான உற்பத்தி விற்பனை தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டமை மேம்படுத்தப்பட்ட பணிக்கொடைகளின் தொடர்ச்சியான தன்மை போன்றவை இந்த செயலாற்றுகையில தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இந்த செயலாற்றுகையால் மில்லியன் ரவுன் டேபிள் வெற்றி கடந்த வருடத்தின் 14உடன் 41ஐப் பெற்றுக்கொள்ள முடிந்ததுடன், அது கடந்த 15 வருடங்களுக்குள் பெற்றுக்கொண்ட ஆகக் கூடியளவிலான எண்ணிக்கையாகும்.

கடந்த வருடத்தில் நிருவாகக் கம்பனிகளின் நட்டமாக 227 மில்லியன் ரூபா பதிவாகியுள்ளதுடன், முன்னோக்கிச் செல்லுதல், வர்த்தகத்தின் இலாபகரமான தன்மையை அதிகரித்தல், HNBGI இன் நோக்கமென நான் பங்காளர்களுக்கு தெரிவித்திருந்தேன். அவ்வாறான பல மூலோபாயங்களை 2015ஆம் ஆண்டறிக்கையில் நான் சுட்டிக் காட்டியிருந்தேன். இந்த நோக்கங்களின்படி கடந்த வருடங்களில் ஏற்பட்ட நட்டங்களுக்கான அடிப்படைக் காரணம் தமது காப்புறுதி உரிமைக்கான விகிதாசாரமும் 2016இல் 88% இலிருந்து 69%வரை குறைத்துக்கொள்வதில் HNBGI வெற்றியடைந்தது. இந்தக் குறைதல் இந்த நிலைமையை சீர்செய்வதற்காக கலந்த நோக்கத்துடன் தொழிற்துறையில் மேற்கொள்ளப்பட் மூலதன மாற்றங்களின் பெறுபேறாகும். அதன்பெறுபேறாக ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த விகிதாசாரங்களின் வீழ்ச்சி சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட காப்புறுதி இழப்பீடுகள் செலுத்தல் அதிகரித்த பின்னணியிலும்கூட 2015இல் நிறுவத்தின் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்தை மதிப்பிடல் தொடர்பாக தொடர்ச்சியாக முயற்சிப்பதாக கடந்த வருடாந்த அறிக்கையில் என்னால் குறிப்பிடப்பட்டதன்படி மூலோபாய நட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக புதிய நிறுவனங்களுக்கான உபகுழுவொன்று வருட ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டது. இக்குழு தமது நோக்கத்துக்காக மாதாந்தம் கூடுவதுடன், கம்பனியின் நடவடிக்கையில் சிறந்த பங்களிப்பினை வழங்குகின்றது. இந்த சகல மாற்றங்களும் எமது அர்ப்பணிப்புடன்கூடிய குழுவுடன் HNBGI கம்பனி தமது சாதனை மிகு இலாபமாக 2 மில்லியன் ரூபாவினை தமது முதலாவது தவணையில் பெற்றுக்

கொண்டது. எவ்வாறாயினும் இந்த முன்னேற்றமானது பேரழிவினை ஏற்படுத்திய வெள்ளம் மற்றும் தீ விபத்து காரணமாக 880 மில்லியன் ரூபா இழப்பீடு செலுத்த நேர்ந்தமையால் இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணையில் ஓரளவு பின்னடைவு ஏற்பட்டது. எவ்வாறாயினும் இறுதித் தவணையில் எமது சிறந்த செயலாற்றுகையின் காரணமாக கம்பனிக்கு மொத்தம் 3.1 பில்லியன் ரூபாவினை பணிக்கொடையாக பதிவு செய்ய முடிந்தது. அதனை 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 16% வளர்ச்சியாகும். இந்த செயலாற்றுகை கம்பனியின் பொதுவான வளர்ச்சியான 2%இனையும் தாண்டியுள்ளதுடன், வரிக்கு பின்னரான இலாபம் 47 மில்லியன் ரூபாவாகும்.

சந்தை எதிர்பார்ப்புக்களையும் தாண்டிச் செல்லும் இந்த மகிழ்ச்சிகரமான வெற்றி எமது பங்காளர்களுக்கு நிதிப் பயன்களை வழங்குகின்றது மாத்திரமல்ல மிகவும் பலமான குழுவொன்றுக்கான அடித்தளத்தையும் இட்டுள்ளது. இவ்வாண்டினுள் சூழல் நிதியும் 1.7 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதுடன், இது 25% வளர்ச்சியாகும் என்பதுடன் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள நிதியம் 9.9 பில்லியன் ரூபாவாக அதாவது 25% இனால் அதிகரித்துள்ளது. எமது கம்பனியானது எமது நாட்டில் உள்ள உயர் மட்டத்திலான பல வர்த்தகப் பெயர்களை உள்ளடக்குவதுடன், HNBA மற்றும் HNBGI கம்பனிகள் காப்புறுதி நிதி ஆற்றல் தரப்படுத்தலில் “A” lka உடன் பிச் ரேடிங் லங்கா லிமிட்டெட்டினால் வழங்கப்பட்ட நிலையான குறிக்கோளாகக் கொண்ட கம்பனிகளாகும். தொடர்ந்தும் இந்த இரண்டு கம்பனிகளும் அதன் மீள்காப்புறுதிச் சபையின் அணுகுமுறையில் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன், அவை “A” தரத்துடன் கூடியவை என்பதனால் எமக்கு ஒரு நம்பிக்கையை பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு தொடர்பான ஒரு உணர்வினை ஏற்படுத்துகின்றது. இந்த வெற்றியுடன் உங்கள் நிறுவனமானது மேலும் வளர்ச்சியடைவது தொடர்பாக தமது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

**கூட்டாண்மைசமூகப் பொறுப்புத் திட்டங்களின் நிலைபேண் தன்மை (உதவி நடவடிக்கைகள்)**

தமது சமூகப் பொறுப்புக்களை ஆரம்பம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதுடன் விருதுகளை பொது தாபன பொறுப்புக்குள் எட்டாவது தடவையாகவும் நிறுவனம் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்துள்ளது. கிராமியப் பிரதேசங்களில் அடிப்படை வசதியான குடிநீர் இல்லாத பாடசாலைகள் பலவற்றை எம்மால் இனம்காண முடிந்தது. இதன்படி அம்பாறை, மட்டக்களப்பு, தெல்தெனிய மற்றும் கலிகமுவ வலயங்களில் ஐந்து பாடசாலைகளுக்கு இந்த ஆண்டில் தாபன சமூகப் பொறுப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் பெரிதும் வெற்றியளித்ததுடன், அந்த எண்ணிக்கை 43 பாடசாலைகள் வரை அதிகரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக Blood Drive என்ற பெயரில் இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சி எமது நிறுவனத்தினால் பெருமையுடன் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், அது 11வது தடவையாகவும் முன்னெடுக்கப்பட்டது. ஆரோக்கியமான வாழ்க்கை முறைமையை ஊக்குவிக்கும் வகையில் எமது நிறுவனத்தினால் ஆரோக்கியமான வாழ்க்கை தொடர்பான பல நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுசரணை வழங்கப்பட்டது. மேலும், கலை கலாசார திட்டங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் HNBAவினால் திறமை வாய்ந்த கலைஞர்கள் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். நாம் செயற்படும் சமுதாயத்துக்கும் அங்குள்ள மக்களுக்கும் நாம் சேவையாற்றி

வெகுமதிகளை வழங்க வேண்டும் என்ற நம்பிக்கையில் எமது கம்பனி தேசத்துக்கு மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் இதனை பெரிதும் பயன்படுத்திக் கொள்கின்றது.

**கௌரவித்தல்**

எமது நிறுவனத்தின் வளர்ச்சியடைந்து வரும் உன்னத தன்மையை உறுதிப்படுத்தி HNB அசூரன்ஸ், HNB ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பனிக்கு பெருமளவு விருதுகளையும் கௌரவத்தையும் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. 2015ஆம் ஆண்டறிக்கை காப்புறுதிப் பிரிவில் SAFA விருதுக்கான வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக கம்பனிக்கு தனது வருடாந்த ஒருங்கிணைப்பு அறிக்கைக்கு CMA வருடாந்த அறிக்கைகளுக்கான விருது வழங்கும் விழா மற்றும் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 52வது அறிக்கைக்கான விருது வழங்கும் விழாவில் தொடர்ந்தும் பல உயர் விருதுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அதேபோன்று "பின்டெலெக்ட்" மற்றும் இலங்கை காப்புறுதிக் கம்பனியினால் ஒருங்கிணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கை காப்புறுதி தொழிற்துறைக்கான விருது வழங்கும் நிகழ்வில் எமது நிறுவனத்துக்கு இரண்டு விருதுகளைப் பெற முடிந்தது. நுண் காப்புறுதிக்கான கம்பனியின் பங்களிப்பு மற்றும் நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தாபன மற்றும் சமூகப் பொறுப்புக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

**நோக்குகை**

இத்துறையில 15 வருடங்கள் பூர்த்தியான, ஒப்பீட்டளவில் இளம் போட்டியாளரான HNB அசூரன்ஸ் PLC கம்பனி கடந்த பல வருடங்களாக நிலையான அபிவிருத்தியை அடைந்துள்ளது. போட்டியாளர்கள் 15பேர் இருக்கும் சந்தையில் ஆயுட் காப்புறுதியை வழங்குபவர்களில் 06வது இடத்தில் இருப்பதற்கு கம்பனிக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதுடன், தனது தாய்க் கம்பனியான ஹற்றன் நசனல் வங்கி தனியார் நிறுவனத்தின் சக்தியை உச்சளவில் பயன்படுத்தி ஆகக் கூடிய பங்குகளின் உரிமையாளராக பெறுமதி சேர்ப்பதற்கு இந்த வளர்ச்சியை ஆக உச்ச ரேகையிலிருந்து அடிமட்ட ரேகை வரை தொடர்ச்சியாக பேணுவதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் முயற்சிக்கப்படும்.

தமது உற்பத்திகளை மேம்படுத்தி அவற்றை இலாபமான மூலங்களில் இட்டுச் செல்வதன் மூலம் கூடிய பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தமது உற்பத்திகளை மீண்டும் நிலைகொள்ளச் செய்து மேற்கூறிய விடயங்களை வெற்றியடையச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று தமது வாடிக்கையாளர்களை அணுகக்கூடிய ஆலோசனைகளின் சக்தியை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்கும் ஹட்டன் நசனல் வங்கிக் குழுவுக்குள் இருக்கும் திறமைகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல எதிர்பார்க்கின்றது.

மிகவும் போட்டியுள்ள அசௌகரியங்களுடன் கூடிய சந்தையில் பெருமைப்படக் கூடிய மாற்றங்களுடன் தமது உச்ச மட்ட ரேகையிலிருந்து வளர்ச்சியைப் படிப்படியாக அதிகரித்து எமது வங்கித் துறையின் இலாபத்தை அதிகரிப்பது தொடர்பாக HNBGI தனது கவனத்தை செலுத்தியுள்ளது. இந்த நோக்கத்தை அடைவதற்காக ஒழுங்கமைப்புரீதியிலான பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்பத்தை

அதிகளவில் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கான அநுபவத்தை அதிகரித்து கம்பனியின் வர்த்தகத் துறையை மேம்பாடடையச் செய்வது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கம்பனி தற்காலத்தில் நிலையான வளர்ச்சி தொடர்பாக ஆராய்ந்துபார்ப்பதுடன், அது நீண்டகாலத்தில் மூலோபாயரீதியில் மிகவும் சாதகமானதாக அமையும்.

**வரவேற்பு - நம்பிக்கை**

இவ்வாண்டில் முகாமைத்துவத்தின் பதவிகள் சில அதாவது தலைமை நிறைவேற்று உத்தியோகத்தர், தலைமை நிதி உத்தியோகத்தர், பிரிவுத் தலைவர்கள், நிருவாக சபை செயலாளர் பதவிகளில் இருந்து விலகியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் இந்த நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக வழங்கிய பங்களிப்புக்காக அவர்கள் அனைவரையும் பெரிதும் பாராட்டுகின்றேன். அதேபோன்று அனைத்து HNB பதவியணியினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், விசேடமாக பேல் அசூரன்ஸ்சின் ஆரம்பப் தொடக்கம் பணியாற்றியவர்கள் இந்த வெற்றி இலக்கை அடைவதற்காக வழங்கிய பங்களிப்புக்கும் நான் நன்றி தெவிரித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**நியமனம் - வரவேற்றல்**

காப்புறுதித் துறையில் பல வருட அநுபவம் உள்ள திருமதி மரினா தாமரத்தனம் HNBGI இல் சுயாதீனமற்ற பணிப்பாளர் பதவிக்கு 2016 செப்டெம்பர் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்.

23 வருட சேவைக் காலத்தில் காப்புறுதித் துறையில் சிரேஸ்ட பதவிகள் பலவற்றை வகித்த திரு. தீப்தி லொக்குஆராச்சி 2016.05.02 ஆம் திகதி முதல் HNBA மற்றும் HNBGI இல் தலைமை நிறைவேற்று உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். அவரது புதிய நியமனத்துக்கு முன்னர் அவர் இலங்கை காப்புறுதிக கூட்டுத்தாபனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றினார்.

நான் அவர்கள் இருவரையும் நிறுவனத்தின் சார்பாக பெருமையுடன் வரவேற்கின்றேன். அதேபோன்று இத்தொழில் துறையில் அவர்களுக்கு உள்ள அநுபவம் மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான அவர்களது ஆற்றல் என்பவற்றை அவர்கள் எமது நிறுவனத்துக்கு வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

HNBA இன் சட்டப் பிரிவின் தலைவர் மற்றும் HNBGI இன் நிர்வாக சபையின் செயலாளர் திருமதி. சித்தாரி ஜயசுந்தர HNBA நிருவாகச் சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். HNBA பணிப்பாளர் சபையின் சார்பாக அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மதிப்பிடுதல்**

IBSL தவிசாளர், பணிப்பாளர் நாயகம் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் 2016ஆம் வருடம் முழுவதிலும் தொடர்ச்சியாக வழங்கிய ஒத்துழைப்புக்கு எனது நன்றியை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று காப்புறுதி ஒம்பூட்ஸ்மனுக்கும் இத்தொழில் துறையின் நன்மைக்காக அவர் வழங்கிய பங்களிப்புக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கால எல்லையில் என்னுடன் பணியாற்றிய எனது சகோதர பணிப்பாளர்கள் எனக்கு வழங்கிய வலுவான ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலை இந்த சந்தர்ப்பத்தில் பெரிதும் பாராட்டி நினைவு கூறுகின்றேன். அவர்களின் அந்த ஒத்துழைப்பு கிடைத்திருக்காவிடில் எனக்கு இந்த நிருவனத்தை இத்தகைய உயர் நிலைக்கு கொண்டு வர முடியாமல் போயிருக்கும். அதேபோன்று புதிய நிறைவேற்று அதிகாரி, முகாமைத்துவக்குழு மற்றும் பணிப்பாளர்கள் வருடம் முழுவதிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்காக அவர்கள் வழங்கிய பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு மற்றும் நிறுவனத்தின் மீதான அவர்களது பற்று தொடர்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக நிருவாகச் சபைக்காக சகல தரப்பினருக்கும் அவர்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்காக என நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், நிருவாகத்தின் நிர்வாக தராதரங்களை உயர் மட்டத்தில் பேணி எமது தரப்பினருக்கு நிலையான பெறுமதியை வழங்க நாங்கள் தொடர்ச்சியாக செயற்படுவதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

ரோஸ் குரே
தலைவர்
09 மாசி 2017

**(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2016 இல் பக்கம் 37 - 39 வரையுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வின் தமிழ் மொழிபெயர்ப்பு)**

**அன்புள்ள பங்கீட்டுப்பாட்டாளர்கள்,**

2016 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த எச்.என்.பீ. அசுரன்ஸ் பீ.எல்.சீ. இன் ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இது எங்களது ஐந்தாவது ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையாகும். எமது நிறுவனம் மற்றும் அதன் முழுச்சொத்துமுடைய துணை நிறுவனம், எச்.என்.பீ. ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றின் மூன்று அடிமட்டச் செயலாற்றுகைகளை உள்ளடக்கியதாக இது காணப்படுகிறது.

15 வருடங்களாக வெற்றிகரமாக ஆயுட் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதை 2016 ஆம் ஆண்டில் நாம் அடைந்துள்ளோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ் அறிக்கையின் தொனிப்பொருளில் குறிப்பிடப்பட்டவாறு, கடந்த காலங்களில் மேற்கொண்டதைப் போல் எமது பங்கீட்டுப்பாட்டாளர்களை எதிர்வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக மகிழ்வுடன் வைத்திருப்பதற்குரிய நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.

எச்.என்.பீ. அசுரன்ஸ் மற்றும் அதற்கு முழுச் சொந்தமுடைய துணைக் கம்பனியான எச்.என்.பீ.ஜீ.ஐ. (HNBGI) ஆகியன 2016 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த காலப்பகுதியினுள் வரி செலுத்திய பின்னர் ரூபா. 647 மில்லியனை குழு இலாபமாகப் பெற்றது என்பதை உங்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றேன். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இது 228 சதவீத வளர்ச்சியாகும். மேலும் குழுக் கம்பனியானது 6 பில்லியன் ரூபாவை விட அதிகமான வருமானத்தை ஈட்டியது. அத்தோடு, திரட்டிய காப்புறுதிக் கட்டுப்பணமாக 6.7 பில்லயின் ரூபாவை பதிவுசெய்தது. இவ்வாறு எமது துரித அதிகரித்த வளர்ச்சியை நோக்குகையில் எமக்குக் கிடைத்த வருமானமானது நாம் துரிதமாக வளர்ந்துவரும் காப்புறுதிக் கம்பனி என்பதை எடுத்துரைக்கின்றது.

## சவால்மிக்க சூழல்

இவ் வருடகாலப்பகுதியானது காப்புறுதித் துறையைப் பொறுத்தவரையில் சவால்மிக்க காலப்பகுதியாகும். இவற்றுள் பாரிய பொருளாதார முறைகள் மற்றும் மே மாதத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கு ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். இதன் காரணமாக அதிக எண்ணிக்கை மற்றும் அதிக பெறுமதியிலான இழப்பீட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. பொதுக் காப்புறுதித் துறை இலாபத்தில் இது தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்தோடு, முதலீடுகளுக்கான வாய்ப்புகளையும் மட்டுப்படுத்தியது. ஆனால், ஆயுட்காப்புறுதிகளைப் பொறுத்தவரையில், பொதுமக்களிடம் செலவிடக்கூடிய வருமானம் அதிகமாகக் காணப்பட்டதன் காரணமாக வளர்ச்சிக்கான சரியான களத்தை இது அமைத்துக் கொடுத்தது. ஆனால், சமகாலத்தில் வட்டி வீதங்கள் அதிகரித்தமையின் காரணமாக மக்கள் தமக்குக் கிடைத்த வருமானங்களை சேமிப்புகளாக அத்தகைய முதலீடுகளிலும் முதலீடு செய்தனர்.

இலங்கைக் காப்புறுதித் துறையைப் பொறுத்தவரை, 2016 ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனை மிக்க ஆண்டாக மாறியது. கடனிறுக்கும் ஆற்றலிலிருந்து இடர் மைய மூலதனம் (RBC) நிலைக்கு மாற்றமடைந்தது. இலங்கைக் காப்புறுதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டல்களின் காரணமாகவே இவற்றை அடையக் கூடியதாகவிருந்தது. காப்புறுதிக் கம்பனிகள் எதிர்கொள்கின்ற இடர்களைக் கருத்திற்கொண்டு நட்டஈடுகளை வழங்கும் முகமாக காப்புறுதிக் கம்பனிகள் ஆகக் குறைந்த மூலதனமொன்றைப் பேண வேண்டுமென RBC விதிமுறைகள் தேவைப்படுத்துகின்றன. காப்புறுதிக் கம்பனிகளின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதானது இடர்களைத் தாக்குப் பிடிக்கக் கூடிய அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு திகழ்தல் வேண்டும். புதிய இடர் பிராந்திய தேவைப்பாடுகளுக்கு ஏற்ப உற்பத்திகள் மற்றும் முதலீடுகளுக்கான நிதி ஆகியவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும். இத்தகைய புதிய தேவைப்பாடுகளானது கம்பனியை உறுதியான மூலதன அடிப்படை ஒன்றை நோக்கிப் பயணிக்கச் செய்யும், செயற்பாட்டாளர்கள் மத்தியில் உறுதியை ஏற்படுத்தும். மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் இரண்டு கையகப்படுத்தல்களை

மேற்கொண்டதன் மூலம் பொதுக் காப்புறுதித் துறை இதனை நிரூபித்தது. பொதுக் காப்புறுதித் துறையில் இன்று காணப்படுகின்ற விலை தொடர்பிலான கடும் போட்டிகளின் காரணமாக சந்தை பங்குபற்றுனர்கள் தொடர்ச்சியாக இணைப்புகளையும் கையகப்படுத்தல்களையும் எதிர்பார்க்கின்றனர். எதிர்வரும் காலப்பகுதியிலும் இத்தகைய போக்கு தொடருமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

## செயலாற்றுகை தொடர்பான கண்ணோட்டம்

## ஆயுட்கால காப்புறுதி தொடர்பான விடயங்கள்

சவால் மிக்க சூழலுக்கு மத்தியில் எமது கம்பனியின் ஆயுட்கால காப்புறுதியைப் பொறுத்தவரையில் 2016 ஆம் ஆண்டு ஒரு வெற்றிகரமான ஆண்டாகத் திகழ்ந்தது. மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணம் ரூபா. 3.6 பில்லியனை அடைந்தது. இது 27 வீத அதிகரிப்பாகத் திகழ்ந்ததுடன், எமது துறையில் 19% ஐ விட அதிகமானது. இந்த அடைவுடன் எச்.என்.பீ.ஏ ஆனது சந்தையில் ஆறாவது இடத்தைப் பேணக்கூடியதாகவிருந்தது. 2015 ஆம் ஆண்டில் நாம் அடைந்த 19 வீத வளர்ச்சியுடன் ஒப்புநோக்குகையில் குறிப்பிடக்கூடியளவு துரித வளர்ச்சியை எம்மால் அடையமுடிந்தது என்பதைக் கருத்திற்கொள்வது முக்கியமானதாகும்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் 32 வீதமாக அதிகரித்த தர்ம சாதனக் கொள்கைகள் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்திற்கு 86 வீத பங்களிப்புகளை நல்கின. மைபண்ட் மற்றும் ரண்மக என்பவை இவற்றுள் முக்கிய பாகத்தை வகித்தன. அத்தோடு, அடகு வைத்தல் குறைத்தல் கொள்கையானது 15 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இத்தகைய மாற்றங்களின் காரணமாக கம்பனியானது தனது தொடர் கட்டுப்பண தர்ம சாதன விடயங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டது. முதலாவது வருட காப்பிட்டு காலாவதியாகும் வீதம் 46 வீதமாகப் பேணப்பட்டது. விநியோக முகாமைத்துவக் குழுவின் கடும் முயற்சிகள் இதற்குப் பாரியளவில் உதவின மற்றும் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட தனித்துவமான அணுகுமுறைகளின் காரணமாக காப்பிட்டு நிர்வாகம் மற்றும் பேணுதல்கள் ஆகியவற்றை சிறப்பாகப் பேணக்கூடியதாகவிருந்தது.

எச்.என்.பி. அசுரன்ஸ் ஆனது முன்னர் எப்போதுமில்லாத அளவிற்கு ரூபா. 600 மில்லியனை இலாபமாகப் பதிவுசெய்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 40 வீத வளர்ச்சியாகும். கடந்த வருடம் கிடைத்த இலாபம் ரூபா. 427 மில்லியன் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஆயுள் காப்புறுதி வியாபாரத்திலிருந்து மேலதிகமாக மாற்றம் செய்யப்பட்ட தொகையும் 49 வீத வளர்ச்சியைக் காட்டியது. 2015 ஆம் ஆண்டில் கிடைத்த இலாபம் ரூபா. 310 மில்லியன் ஆகும். அதனோடு ஒப்பிடுகையில் இவ்வருட இலாபம் ரூபா. 461 மில்லியனை அடைந்துள்ளது.

வருட இறுதியின் பொழுது, ஆயுள்காப்புறுதி நிதியானது, ரூபா. 8.6 பில்லியனை அடைந்தது. மேலும் காப்புறுதியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு ரூபா. 1000 இற்கு ரூபா. 54 ஐ போனசாக வழங்குவதென கம்பனி பிரகடனம் செய்தது. அத்தோடு, நிதி மைய உற்பத்தி சார்ந்த காப்புறுதிகளைப் பெற்றவர்களுக்கு 8 வீத பங்கிலாபம் வழங்குவதாகவும் பிரகடனம் செய்தது.

எங்களது முகவர்களது தராதரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை மிகவுயர்வான மட்டத்தில் காணப்பட்டன. இவர்களின் தொழில்வாண்மையைப் பேணுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் காரணமாகவும் அவ்வாறு பேணவேண்டுமென்ற தாகத்தின் காரணமாகவும் 41 முகவர்கள் மில்லியன் டொலர் வட்ட மேசையில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றனர். இவற்றுள் ஒரு உறுப்பினருக்கு அதியுயர் விருதான Table Membership வழங்கப்பட்டது. மற்றுமொரு உறுப்பினருக்கு Court of the Table Member எனும் உறுப்புரிமை வழங்கப்பட்டது. இது அகத்தூண்டல் மிக்க மகிழ்வுக்குரிய விடயமாகும். முகவர்களில் 14 உறுப்பினர்கள் கடந்த வருடம் இத்தகைமையைப் பெற்றனர்.

## பொதுக் காப்புறுதி வியாபாரம்

எமது கம்பனியின் பொதுக் காப்புறுதி தொடர்பான வியாபாரமானது மேல், கீழ் ஆகிய இரு மட்டங்களில் ஆரோக்கியமாக இடம்பெற்றது. 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட பாதகமான நிலைமைகள் சவால் மிக்கதாகக் காணப்பட்டன. இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் அவை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்யப்பட்டன. பொதுக் காப்புறுதியை அதன் தன்மையின் அடிப்படையில் நோக்குகையில் பல எதிர்வுகூற முடியாத நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இது காணப்படுகிறது. இருப்பினும், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே உரிய தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய முகாமைத்துவத்தின் ஆற்றல் காரணமாகவும் அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கான முன்கூட்டிய தயார்நிலையில் இருந்தமை காரணமாகவும் இவை எமது வெற்றிக்கு வழியிட்டுச் சென்றன. இடர் தொடர்பான தெரிவுகள் மற்றும் விலையிடல்கள், செலவு ரீதியான முகாமைத்துவம் ஆகியவற்றை மையப்பொருளாகக் கொண்டு எமது நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ உபாயத்தின் காரணமாக நாம் மேற்கொண்ட தயார் நிலைகளை 2016 ஆம் ஆண்டில் வினைத்திறன் மிக்க முறையில் நிறைவேற்ற முடிந்தது. இந்த 3 அம்சங்களும் எமது குழுவினால் மிகவும் காத்திரமாக கையாளப்பட்டது. இதன் காரணமாக ஸ்திரத்தன்மைமிக்க வியாபார மாதிரி அபிவிருத்திக்கு இவை இட்டுச் சென்றதுடன், 2016 ஆம் ஆண்டில் ஒன்றுதிரட்டிய வருமானம் மற்றும் இலாபம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் இவை பங்களிப்புச் செய்தன. இதன் பிரகாரம் 16 வீத வளர்ச்சியை கம்பனி பதிவுசெய்தது. இதன் மூலம் ரூபா. 3.1 பில்லியனை அடைய முடிந்தது. இதன் காரணமாக வருடத்தில் கிடைத்த இலாபம் ரூபா. 47 மில்லியன் ஆகும்.

அர்ப்பணிப்பு மிக்க எமது தொழிற்படையின் செயற்பாடுகள் காரணமாக உற்சாகமூட்டக்கூடிய பல வெற்றிகளை எம்மால் அடைய முடிந்தது. இயங்காற்றல் மிக்க முகாமையாளர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய குழுக்களின் காரணமாகவும் அதேவேளை, தூரநோக்குடன் சபை இவர்களை வழிப்படுத்தியன் காரணமாகவும் வெற்றிப் பாதையை நோக்கி எமது பயணத்தை இலாபத்துடன் மேற்கொள்ளக் கூடியதாகவிருந்தது. இவை எச்.என்.பீ.ஜீ.ஐ. இன் எதிர்கால வளர்ச்சிக்கும் முக்கிய காரணிகளாக அமைந்தன என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## முதலீடு

சவால்மிக்க பேரண்டப் பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில், நிரந்தர வருமானம் மற்றும் உரிமை முதல் முதலீடுகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட வருடத்தின் பொழுது எமது நிதி முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பிலான முயற்சிகள் மிகக் காத்திரமாகவும் மிகச் சிறப்பாகவும் செயற்பட்டன என்பதைத் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது முதலீடு தொடர்பான முயற்சிகளின் காரணமாக குறிப்பிடக்கூடிய முதலீட்டு வருமானமாக 25 வீத வளர்ச்சியை எம்மால் அடைய முடிந்தது. இதன் காரணமாக இவ்வருடத்தின் பொழுது ரூபா. 1.1 பில்லியனை அடைய முடிந்தது. முதலீட்டு வருமானத்திற்கான தாய்க் கம்பனியின் பங்களிப்பு ரூபா. 958 மில்லியன் ஆகும். இது 31 வீத வளர்ச்சியாகும். முகாமைத்துவத்தின் கீழ் 25 வீத வளர்ச்சிக்கு இவை உதவிகளை நல்கின. அத்தோடு, மிகவும் முன்னெச்சரிக்கை முதலீட்டு உபாயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

துணைக் கம்பனியான HNBGI ஆனது ரூபா. 187 மில்லியன் முதலீட்டு வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்தது. இருப்பினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 0.9 வீத வீழ்ச்சியாகும். வெள்ளப் பெருக்கின் காரணமாக அதிக இழப்பீடு தொடர்பிலான கோரிக்கைகளை நிவர்த்தி செய்யவேண்டி ஏற்பட்டதன் காரணமாக எமது எதிர்பார்ப்புகளை பேண முடியாத நிலைமை ஏற்பட்டது.

பொருளாதார ரீதியான குறிகாட்டிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை மிகவும் துல்லியமாக முன்கூட்டியே எதிர்வுகூற முடிந்தமையின் காரணமாகவும் வட்டி வீதம் மற்றும் சந்தைப்படுத்தல் நேரத்தின் மேம்படுத்தப்பட்ட செயற்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக இடர்களைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்ய முடிந்தது. இதன் காரணமாக வட்டி வருமானத்தை 35 வீதத்தினால் அதிகரிப்பதற்கு இவை உதவின. பங்குச் சந்தை தொடர்பிலான செயற்பாடுகளில் காணப்பட்ட

நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக கம்பனி அவை தொடர்பிலான செயற்பாடுகளில் குறைவாக ஈடுபடுவதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் காரணமாக மூலதன ரீதியான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் குறைவடைந்தன. இருப்பினும் உறுதியான பெறுபேறு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் முகமாக சரியான நேரத்தில், சரியான திசையில் மேற்கொள்ளப்பட்டதொரு அறிவார்ந்த நடவடிக்கையாக இதனை நான் கருதுகின்றேன். உரிய நேரத்தில் நாம் மேற்கொண்ட சிறப்பான தீர்மானங்களின் காரணமாக உரிமை முதல் தொடர்பான செயலாற்றுகைகள் மிகவும் சிறப்பாக அமைந்தன. சகல பங்கு விலை குறிகாட்டி (ASPI) சராசரி வீதம் 8.1 வீதமாகும். மேலும் நிதி முகாமைத்துவக் குழுவின் உள்ளக நிபுணத்துவம் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். இவர்களின் செயற்பாடுகள் காரணமாக கம்பனியின் அடிமட்டத்தில் பல மேம்பாடுகள் பதிவுசெய்யப்பட்ட மற்றுமொரு வருடம் என இதனைக் குறிப்பிடலாம்.

## போதிய மூலதனம் மற்றும் ஸ்திரத்தன்மை

HNBA மற்றும் HNBGI ஆகியன கடந்த கடனிறுக்கும் ஆற்றல் பிராந்தியத்திலிருந்து இடர் மைய மூலதனப் பிராந்தியத்திற்கு (RBC) சுமுகமா நிலைமாறின. கடந்த வருடங்களில் இந்த இரண்டு வியாபாரங்களும் RBC சோதனை மற்றும் கட்டாய சமாந்தரச் செயற்பாடு ஆகியவற்றில் பங்குபற்றின. மற்றும் புதிய மாதிரிகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு வெளியிலுள்ள காப்புறுதி நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டது. சகலவிதமான ஒப்பந்தங்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை வழங்கியதன் பின்னர் 2016 டிசம்பர் 31 இல் HNBA 445 வீத போதியளவு மூலதன வீதத்தையும் HNBGI ஆனது 168 வீதத்தையும் பதிவுசெய்து கொண்டன.

தேசிய நீண்டகால தரக்கணிப்பு மற்றும் காப்பீட்டாளர் நிதி ரீதியான வல்லமை தரக்கணிப்பு ஆகியவற்றில் எமது நிறுவனத்திற்கு ஏ தரத்தை பிட்ச் ரேடிங்க லங்கா லிமிடட் வழங்கி மீள் உறுதிப்படுத்தியது. இதன் மூலம் நிதி ரீதியாக எமது கம்பனி ஸ்த்திரத்தன்மையைக் கொண்டுள்ளது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

## நன்றி நவிலல்

எப்போதும் எமது கம்பனியின் நலனுக்காக முழுமையான உதவிகளையும் வழிகாட்டல்களையும் உற்சாகமூட்டல்களையும் வழங்கி வருகின்ற தவிசாளர் அவர்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர், பணிப்பாளர் நாயகம் மற்றும் IBSL பணியாளர்கள் ஆகியோருக்கும் அவர்கள் வழங்கிய உதவிக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வருடத்தின் பொழுது சிறப்பான பயனை நாம் அடைவதற்காக எவ்வித பிரதியுபகாரங்களையும் எதிர்பாராமல் உதவிகளை வழங்கிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பிரிவுத் தலைவர்கள், முகாமையாளர்கள், பணியாட்தொகுதி உறுப்பினர்கள், விற்பனைப் பிரிவு உறுப்பினர்கள் மற்றும் களப் பணியாளர்கள் ஆகியோருக்கு எனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இச்சந்தர்ப்பத்தில் தனது பூரண உதவிகளை நல்கிய சகல இடைத்தரகர்கள், மீள் காப்புறுதியாளர்கள், இடைத்தரகர்கள், வலையமைப்பு மற்றும் உபாய ரீதியான பங்காளர்கள் ஆகியோருக்கும் எனது விசேட நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## முன்னோக்கிய பயணம்

அடுத்துவரும் வருடங்களில் காப்புறுதிச் சந்தைப்படுத்தல் சார்ந்த விடயங்கள் சவால்மிக்கதாகத் திகழுமென நான் நினைக்கின்றேன். பொதுக் காப்புறுதித் துறையில் சில திடப்பாடுகளை நாம் அவதானித்த பொழுதிலும் கூட போட்டிகள் தொடர்ந்தும் அதிகரித்த நிலையிலேயே காணப்படும். ஒழுங்குபடுத்தல் மாற்றங்களில் காணப்படுகின்ற இயங்காற்றல் மிக்க தன்மைகளின் காரணமாக சந்தை ரீதியான இயங்காற்றலில் இவை பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். இருப்பினும், காப்புறுதித்

துறையில் பொதுவாக அதிக வாய்ப்புகள் இருக்குமெனக் கருதப்படுகிறது. குறிப்பாக மோட்டார் வாகனம் சாராத மற்றும் ஆயுள் காப்புறுதித் துறைகளில் இவை அதிகரித்துக் காணப்படலாம்.

அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் முகமாக அடுத்துவரும் வருடங்களில் எமது உற்பத்தி சார்ந்த விடயங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். பொதுக் காப்புறுதித் துறை மூலமாக உற்பத்தி கலப்பு இலக்கு வளர்ச்சியானது காத்திரமாக சந்தையில் செயற்படுதல் உள்ளடங்கலாக காப்பீட்டுக் கட்டணங்களை உகந்த முறையில் மேலும் வலுப்படுத்துவதை உள்ளடக்கிக் காணப்படும். காப்புறுதித் துறை சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்தும் முகமாகவும் உகந்த விலை நிர்ணயங்களை மேற்கொள்ளும் முகமாகவும் உள்ளக மற்றும் வெளிநிலையைச் சார்ந்த காப்புறுதி ஆலோசகர்களின் உதவிகள் பெறப்படும். அதிகப்படியாக மக்களைச் சென்றடைதல் மற்றும் இலக்கு ரீதியான சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் மூலமாக சந்தை வாய்ப்புகளை மென்மேலும் அதிகரிக்கும் முகமாக நாம் காத்திரமாகச் செயற்படுகின்றோம். மேலும் எதிர்வரும் வருடங்களில் உபாய ரீதியான பங்காண்மைகள் எமது கம்பனியைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் மிக்கதாகத் திகழும்.

எதிர்காலத்தில் எமது வியாபாரத்தின் முக்கிய அங்கமாக மனித வளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியன கருதப்படும். எனவே, இத்துறைகளில் அதிக முதலீடுகளை நாம் மேற்கொள்வோம். உள்;ர்க் காப்புறுதித் துறையில் தனித்துவமான புத்தாக்க ரீதியான அனுபவங்களைக் கொண்டுவருவதற்கு தொடர்ச்சியான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம். மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியினுள் நாம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய உபாயங்கள் எமக்கு மேலதிக இலாபங்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதுடன், எமது முதலீடுகளுக்கு அதிக இலாபங்களைப் பெற்றுத்தருகின்ற அதேவேளை எதிர்வரும் காலங்களிலும் எமது பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கும் ஸ்த்திரத் தன்மைமிக்க பெறுமதிகளை வழங்குவதற்கு இவை துணைபுரியுமென நாம் நம்புகின்றோம்.

தீப்தி லொக்குஆராச்சி
பிரதம நிறைவேற்று அதிகாரி
09 மாசி 2017